சி. சுப்பிரமணியம் நினைவு நாள்

குடியரசு துணைத் தலைவர் அஞ்சலி



விடுதலைப் போராட்ட வீரர் சி. சுப்பிரமணியத்தின் நினைவுநாளையொட்டி தில்லியில் உள்ள தனது மாளிகையில் அவரது உருவப் படத்திற்கு சனிக்கிழமை மலர் தூவி அஞ்சலி செலுத்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

நமது நிருபர்

புது தில்லி, நவ.7: சுதந்திரப் போராட்ட வீரர் சி.சுப்பிரமணியம் நினைவுநாளில் அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

இது குறித்து தனது 'எக்ஸ்' தளத்தில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: 'பாரத ரத்னா' சி. சுப்பிரமணியத்தின் நினைவுநாளில், குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் அவரது உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினேன்.

சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்த அவர், சுதந்திரத்திற்குப் பிறகு தமிழக அரசிலும் மத்திய அரசிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்து, சிறப்பான நிர்வாகப் பங்களிப்பை வழங்கினார். மத்திய அமைச்சராகவும், மகாராஷ்டிர ஆளுநராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

தியாகம், துாய்மை, தேசபக்தி ஆகிய உயரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு தனது நீண்ட நெடிய பொதுவாழ்வை அர்ப்பணித்தவர் சி.எஸ். இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கும் வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்டதில் அவரது பங்களிப்பு மகத்தானது. அவரது தொலைநோக்குப் பார்வையும் முயற்சிகளும் இந்தியாவின் உணவுப் பாதுகாப்புக்கும், பால் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா உயர்வதற்கும் வலுவான அடித்தளமிட்டன.

அவரது நினைவு நாளில், தேசத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து, அவருக்குப் புகழஞ்சலி செலுத்துவதில் பெருமை கொள்கிறேன் என அப்பதிவில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நிர்வாகம், நிதி விவகார ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்திய அதிகாரி தேர்வு

நியூயார்க், நவ.7: ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபையின் நிர்வாகம் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராக (2027-29 கால கட்டம்) இந்திய பெண் அதிகாரி ஷிவானி குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வரும் 2027-ஆம் ஆண்டு ஜனவரி முதல் மூன்று ஆண்டு கால இந்த உறுப்பினர் பதவிக்கு ஷிவானி குப்தாவை தேர்வு செய்ய ஆதரவு தெரிவித்த ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு, ஐ.நா.வுக்கான இந்திய நிரந்தர தூதர் நன்றி தெரிவித்தார். ஐ.நா. பொதுச் சபையின் துணை அமைப்பான 'நிர்வாகம் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆலோசனைக் குழு' என்பது, பொதுச் சபையால் தனிப்பட்ட தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து நியமிக்கப்பட்ட 21 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

ஐ.நா. சபையின் உலகளாவிய பணிகளுக்கு உறுப்பு நாடுகள் வழங்கும் பங்களிப்புகளை பொறுப்புடனும் திறமையுடனும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, பல்வேறு புவியியல் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த உறுப்பினர்கள் மூன்றாண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் வரவு-செலவுத் திட்ட விவகாரங்கள் மற்றும் வளங்கள் தொடர்பான முன்மொழிவுகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்கள்.

நூற்றாண்டு நாயகர் பாரத ரத்னா எல்.கே. அத்வானி

பிரதமர் நரேந்திர மோடி

எல்.கே. அத்வானி என்கிற லால்கிருஷ்ண அத்வானி ஞாயிற்றுக்கிழமை (நவ.8) தனது நூறாவது வயதில் அடியெடுத்து வைக்கிறார். நவீன இந்தியாவின் வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில், வெகு சில ஆளுமைகள்தான் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

அத்வானி, 1927 நவம்பர் 8-ஆம் தேதி கராச்சியில் பிறந்தார். 1947-ஆம் ஆண்டு, தமது இளம் வயதில், சிந்துவில் தனக்குப் பழக்கமான வாழ்விடத்தையும் சூழலையும் விட்டுப் பிரிய வேண்டிய வேதனையை அவர் அனுபவித்தார். இருப்பினும், எவ்விதக் கசப்புணர்வும் இன்றி, பூஜ்ஜியத்திலிருந்து தனது வாழ்க்கையை மீண்டும் கட்டமைத்துக் கொண்டார்.

எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு, அடிப்படையிலிருந்து ஒன்றை உருவாக்கும் இந்தப் பண்பு, அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வெளிப்பட்டு வந்துள்ளது. ஜன சங்கத்தை வலுப்படுத்திய போதும், பின்னர் பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கி வளர்த்தபோதும் இந்தப் பண்பு வெளிப்பட்டது.

அத்வானியை ஒரு தனித்துவமான தலைவராக, எப்போதும் அவரின் இரண்டு பண்புகள் அடையாளப்படுத்துகின்றன. முதலாவது, அவரது கொள்கைத் தெளிவும், அறிவுக் கூர்மையும்; அவரின் எழுத்துகளிலும், உரைகளிலும் இந்தப் பண்புகள் வெளிப்பட்டன. இரண்டாவது, இந்திய அரசியல் களத்தின் பெரும்பான்மையான பிரிவினரால் பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போலி மதச்சார்பின்மையை அவர் அம்பலப்படுத்திய விதம்.

தனக்கு ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கவனத்துடனும் அவர் நிறைவேற்றினார். ஆர்எஸ்எஸ் தொண்டராக தனது பணியைத் தொடங்கிய அவர், முதலில் ராஜஸ்தானின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றினார். அங்கிருந்து தலைநகர் தில்லிக்குச் சென்ற அவர், மூத்த தலைவர் வாஜ்பாயுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றத் தொடங்கினார். இருவரும் இணைந்து இந்திய அரசியலின் போக்கையே மாற்றி அமைத்தனர்.



அத்வானியின் நாடாளுமன்றப் பயணம் 1970-ஆம் ஆண்டில் தொடங்கியது. நாடாளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரைகளும் முன்வைத்த கருத்துகளும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களின் பாராட்டைப் பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் எதிர்க்கட்சித் தலைவராகவும், ஆளுங்கட்சி உறுப்பினராகவும் அவர் தனித்துவமான முத்திரையைப் பதித்தார்.

அத்வானியின் வாழ்க்கையில் அவசரநிலைக்காலம் (1975-ஆம் ஆண்டு), ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. ஜனநாயகத்தைக் காப்பதிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதிலும் அவர் முன்னிலை வகித்தார். அவசரநிலைக் காலத்தில் அவர் பெற்ற அனுபவங்கள், 'ஒரு கைதியின் குறிப்பேடு' என்ற அவரது நூலில் இடம்பெற்றுள்ளன.

அத்வானி சிறந்த எதிர்க்கட்சித் தலைவராகவும், நிர்வாகியாகவும் விளங்கினார். 1977-ஆம் ஆண்டு பிரதமர் மொரார்ஜி தலைமையில் ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சராக அத்வானி பொறுப்பேற்றார்; அதில் அவர் ஆற்றிய பணிகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பணியாற்றி, நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் அவர் முக்கியப் பங்காற்றினார். பயங்கரவாதத்துக்கு எதிராக அவர் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்டதன் விளைவாக, இந்தியாவில் கடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்வானியின் வாழ்க்கையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகளில் ஒன்று, சோமநாதர் ஆலயத்திலிருந்து அயோத்தி வரை நடைபெற்ற ரத யாத்திரையாகும். இது, இந்தியச் சமூகத்தின் போக்கில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியது. பல ஆண்டுகளுக்குப் பின், இந்திய மக்களின் ஆசியுடன், அயோத்தியில் பகவான் ஸ்ரீராமருக்கு பிரம்மாண்டமான ஆலயம் எழுப்பப்பட்டது.

அத்வானியைக் கெளரவிக்கும் வகையில், 2024-ஆம் ஆண்டு அவருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது. அத்வானி தனது 100-ஆவது வயதில் அடியெடுத்து வைக்கும் (நவ.8, 2026) இந்தச் சிறப்பான தருணத்தில், அவர் நல்ல உடல்நலத்துடன் நீண்டகாலம் வாழவும், எப்போதும்போல நம் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கவும் இறைவன் அவருக்கு அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

'420'-ஆக மாறிய 'இ20' பெட்ரோல்!

ராகுல் காந்தி விமர்சனம்



புது தில்லி, நவ.7: கர்நாடக மாநில அரசு மேற்கொண்ட ஆய்வில், அந்த மாநிலத்தில் விநியோகிக்கப்படும் பெட்ரோலில் 20 சதவீதத்துக்கு மேல் 31.2 சதவீதம் வரை எத்தனால் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், '420-ஆக மாறிய மோசடி 'இ20' பெட்ரோல்; மக்களின் கார்களிலிருந்து பெட்ரோலைத் திருடும் மத்திய அரசு' என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சனிக்கிழமை விமர்சித்தார்.

கர்நாடக மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் பெட்ரோல் நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பெட்ரோல் மாதிரிகளை, அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தில் மாநில அரசு அண்மையில் சோதனை மேற்கொண்டது. இந்த ஆய்வு முடிவில், இந்தியன் ஆயில் நிறுவன பெட்ரோலில் 31.2 சதவீத எத்தனாலும், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம், நயாரா உள்ளிட்ட பிற நிறுவனங்களின் பெட்ரோலில் 30.5 சதவீத எத்தனாலும் கலந்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, கர்நாடக அரசின் ஆய்வு முடிவை தனது எக்ஸ் பக்கத்தில் சனிக்கிழமை சுட்டிக்காட்டி ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில், 'கர்நாடக மாநிலத்தின் 7 மாவட்டங்களில் பல்வேறு பெட்ரோல் நிலையங்களில் சேகரிக்கப்பட்ட 14 மாதிரிகளை ஆய்வகத்தில் பரிசோதித்ததில் 30 .5 சதவீதம் முதல் 31.2 சதவீதம் வரை எத்தனால் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்த அளவைவிட கூடுதல் எத்தனால் கலக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வாகனங்களின் செயல்திறன் கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. நாட்டின் எரிபொருள் டேங்குகளில் என்ன நிரப்பப்படுகிறது? பெட்ரோலில் கலக்கப்படும் எத்தனாலின் உண்மையான அளவு என்ன? பெட்ரோலில் 20 சதவீதத்துக்கு மேல் எத்தனால் கலக்கும் நிறுவனங்கள் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்? 'இ20' பெட்ரோல் '420'-ஆக மாறியுள்ளது (முந்தைய கால இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான மோசடி (420) பிரிவு). இந்த மோசடி மூலம், மக்களின் கார்களிலிருந்து மத்திய அரசு பெட்ரோலைத் திருடுகிறது' என்று குறிப்பிட்டார்.

20 சதவீதத்துக்கு மேல் உயர்த்தப்படாது: கர்நாடக அரசு ஆய்வின் முடிவுகளை மத்திய பெட்ரோலியத் துறை நிராகரித்துள்ளது.

இது குறித்து மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், 'சாதாரண பெட்ரோல் மற்றும் இ20 பெட்ரோல் பயன்படுத்தும் வாகனங்களில், இ85 அல்லது இ100 எரிபொருள்களைப் பயன்படுத்த முடியாது. அதற்கென வடிவமைக்கப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட எரிபொருள் நெகிழ்வு (ஃப்ளெக்ஸ் ஃபியூயல்) வாகனங்களில் மட்டுமே 20 சதவீதத்துக்கு மேல் எத்தனால் கலந்த பெட்ரோலை அல்லது தூய எத்தனாலை பயன்படுத்த முடியும். அதற்கேற்ப, விதிகளில் வாகன வகைப்பாடு, எரிபொருள் விவரக் குறிப்புகள் உள்ளிட்டவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்றார்.

முதுபெரும் தலைவர் அத்வானியின் 100-ஆவது பிறந்தநாள்: சிறப்பு நிகழ்ச்சிக்கு பாஜக ஏற்பாடு

புது தில்லி, நவ.7: பாஜக முதுபெரும் தலைவர் எல்.கே.அத்வானியின் 100-ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், ஞாயிற்றுக்கிழமை சிறப்பு நிகழ்ச்சிக்கு பாஜக ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாஜகவின் மூத்த தலைவரும், முன்னாள் துணைப் பிரதமருமான பாரத ரத்னா விருது பெற்ற அத்வானியின் 100-ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அத்வானியின் ஊக்கமளிக்கும் வாழ்க்கை, நாட்டுக்கு அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க பணி, பாஜகவின் வளர்ச்சிக்கு அவர் அளித்த பங்களிப்பு, அவரின் நீண்டகாலப் பொது வாழ்க்கை பயணம் ஆகியவற்றை நினைவுகூரும் வகையில், பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் தலைமையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்வானியின் மகள் பிரதிபா அத்வானி, மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் உள்பட பாஜக மூத்த தலைவர்கள் பலர் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சியில் 1927-ஆம் ஆண்டு நவ.8-ஆம் தேதி பிறந்த அத்வானி, 99 வயதை நிறைவு செய்து 100-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்.

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாக கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422 2231314, 0422-2231345. மொபைல் : 9963993409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 03.12.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 03.12.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் :

1. Nil - சேலம் கிழக்கு இணை-1 சார் பதிவு அலுவலகத்து 04.11.2026 தேதியிட்ட வில்லங்கச் சான்றின்படி.
2. கோயம்புத்தூர், கடன் மீட்புத் தீர்ப்பாயம், OA/376/2020.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2) முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
கிளை : சேலம் மெயின் (ID : 041600) (தற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது) **திரு. C. பாரதிராஜா மற்றும் M/s. கண்மணி டெக்ஸ்டைல்ஸ்** **கடன்தாரர்/அடமானதாரர் :** **திரு.C.பாரதிராஜா,** த/பெதிரு.சந்திரன், புதிய கதவு எண்.15/1, தங்கசெங்கோடன் தெற்கு வீதி, அம்மாபேட்டை, சேலம்-636003, **திருமதி.B.கனகா,** க/பெதிரு.C.பாரதிராஜா, புதிய கதவு எண்.15/1, தங்கசெங்கோடன் தெற்கு வீதி, அம்மாபேட்டை, சேலம்- 636003 **திரு.C.கார்த்திகேயன்,** த/பெ. திரு.சந்திரன், புதிய கதவு எண்.15/1, தங்க செங்கோடன் தெற்கு வீதி, அம்மாபேட்டை, சேலம்- 636003 **கடன்தாரர் :** **M/s.கண்மணி டெக்ஸ்டைல்ஸ், (உரிமையாளர்- திருமதி.B.கனகா),** புதிய கதவு எண்.15/1, தங்க செங்கோடன் தெற்கு வீதி, அம்மாபேட்டை, சேலம்-636003	**(அட்டவணைச் சொத்து) : திரு.C.பாரதி ராஜா, திருமதி.B கனகா மற்றும் திரு.C.கார்த்திகேயன் பெயரிலுள்ள சொத்து :** சேலம் மாவட்டம் மற்றும் தாலுகா, சேலம் மாநகராட்சி எல்லைக்குள், சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு எல்லைக்குள், N வார்டு, அம்மாபேட்டை கிராமம், பிளாக் எண்.27, டவுன் சர்வே எண்.38, அம்மாபேட்டை தங்க செங்கோடன் வீதியில் உள்ள 2767.50 சதுர அடி நிலமும், அதில் கட்டப்பட்டுள்ளதும் கதவு எண். (பழையது) 15, புதிய கதவு எண்.128 கொண்டதுமான கட்டிடமும் சேர்ந்த **சொத்தின் எல்லைகள் :** அங்காரன்புதூர் ஓடைக்கு வடக்கு, தங்க செங்கோடன் முதலித் தெருவுக்கு தெற்கு, ராஜப்ப முதலியார் மற்றும் பிறரது வீடுகளுக்குக் கிழக்கு, பொன்னுசாமி முதலியார் வீட்டுக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் இருபுறமும் 22 ½ அடி, தென்வடல் இருபுறமும் 123 அடி உடன் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டிடமும், அதன் அனைத்து மின் இணைப்பு, கதவுகள், சன்னல்கள் முதலியனவற்றுடன் மின்சார மோட்டார் பதித்த ஒரு கிணறும் அதன் பிற பயன்பாட்டு உரிமைகள் அனைத்தும் சேர்ந்த, ஆவண எண்.1291/2016ல் சொல்லப்பட்ட இணைப்புகள் சேர்ந்த சொத்து. மேற்படி சொத்து, தங்க செங்கோடன் முதலித் தெருவில் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. பழைய கதவு எண்.15 சொத்தின் மாநகராட்சி வரி விதிப்பு படி உள்ள இதன் புதிய கதவு எண்.128/B, பழைய வரி விதிப்பு எண்.3129950, புதிய வரி விதிப்பு எண்.3063461. மின் இணைப்பு எண்கள் : 04-433-002-532, 04-433-002-726, 04-433-002-1291, குடிநீர் இணைப்பு எண்.3063616. (ஆவண எண்.1291/2016 நாள்.28.03.2016ன் படியானது). **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.655928 N, 78.186247 E**	அ) 25.02.2025 **ஆ) (i) 31.10.2026 தேதி அன்று ரூ.28,61,070.50** மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 0416009900000311- திரு. C.பாரதிராஜா, திருமதி. B.கனகா மற்றும் திரு. C.கார்த்திகேயன் ஆகியோர் பெயரிலானது)** **(ii) 31.10.2026 தேதி அன்று ரூ.96,70,858.00** மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 041600NC00001452- திரு. C.பாரதிராஜா, திருமதி. B.கனகா மற்றும் திரு. C.கார்த்திகேயன் ஆகியோர் பெயரிலானது)** **(iii) 31.10.2026 தேதி அன்று ரூ.55,39,327.00** மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். **(கணக்கு எண். 041600IB00001007- M/s.கண்மணி டெக்ஸ்டைல்ஸ்,உரிமையாளர்- திருமதி.B.கனகா பெயரிலானது)** **மொத்தம் ரூ.1,80,71,255.50* (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சத்து எழுபத்து ஒராயிரத்து இருநூற்று ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா ஐம்பது மட்டும்)** * **மேற்படி கடன் வசதிகள் தவிர, திரு.C.பாரதிராஜா ODMUD (0416009000000046) கடன் ரூ.5.00 லட்சம் பெற்றுள்ளார். இதன் நிலுவைத் தொகையாக 31.10.2026 அன்று ரூ.16,94,143.00** மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன் உள்ளது. இக் கணக்கும் NPA ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. **திரு.C.கார்த்திகேயன் ODMUD (0416009000000037) கடன் ரூ.5.00 லட்சம் பெற்றுள்ளார். இதன் நிலுவைத் தொகையாக 31.10.2026 அன்று ரூ.17,41,931.00** மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன் உள்ளது. இக் கணக்கும் NPA ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இ) 11.06.2025 ஈ) அடையாளம் (முதன்மை நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுகள் கிடைத்தது)	**1) ரூ.97,20,000/-** (ரூபாய் தொண்ணூற்று ஏழு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) **2) ரூ.9,72,000/-** (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்) **3) ரூ.20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** **03.12.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **03.12.2026 (வியாழக்கிழமை) ; காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 06.11.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாசிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)-ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345, 9963993409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 03.12.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 03.12.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் :

1. Nil - சேலம் கிழக்கு இணை-1 சார் பதிவு அலுவலக 04.11.2026 தேதியிட்ட வில்லங்கச் சான்றின்படி.
2. கோயம்புத்தூர், கடன் மீட்புத் தீர்ப்பாயம், OA/442/2024, SA/815/2024.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2) முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1.	**BO : சேலம் செவ்வாய்ப்பேட்டை (ID : 071410) (தற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது)** **M/s. மகாலட்சுமி யார்ன்ஸ்,** **கடன்தாரர் :** **M/s. மகாலட்சுமி யார்ன்ஸ்,** எண்.53, எல்லப்பன் வீதி, அம்மாபேட்டை, சேலம் - 636 006. **உரிமையாளர் :** **திரு.A.V.S.சபரிநாதன்** எண்.53, எல்லப்பன் வீதி, அம்மாபேட்டை, சேலம் - 636 006. **அடமானதாரர் :** **திரு. V.செல்வம்,** கதவு எண்.55/26, சுந்தர கணபதி வீதி, அம்மாபேட்டை, சேலம் - 636 006.	**(அட்டவணைச் சொத்து) :** **லாட் 1 : திரு.V.செல்வம் பெயரிலுள்ள சொத்துக்கள் : (PAN NO AUXPS4567P) :** **இனம் எண்.1 : (ஆவண எண்.1939/1994ன்படி) :** சேலம் மாவட்டம், சேலம் இணை 1 கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, தாதம்பட்டி கிராமத்தில் மிட்டா சர்வே எண்.172/1, மறுதீர்வை சர்வே எண்.185/2ல் உள்ள புன்செய் ஏக்கர் 1.40ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடச் சொத்து, 1452½ சதுர அடி விஸ்தீரணத்தில் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் உள்ளது. **எல்லைகள் :** ராஜியின் நிலத்துக்கு மேற்கு, மாரியப்பகவுண்டர் நிலத்துக்கு வடக்கு, பழனியப்ப முதலியார் மற்றும் சாந்தாயம்மாள் நிலத்துக்குக் கிழக்கு, கிழமேல் வண்டித்தடத்துக்குத் தெற்கு. இதன் **நிலத்தின் நேரிட்ட அளவுகள் :** கிழமேல் வடபுறம் 20 அடி, கிழமேல் தென்புறம் 20 அடி, தென்வடல் கிழபுறம் 72.9 அடி, தென்வடல் மேல்புறம் 72.6 அடி ஆக உள்ள 1452½ சதுர அடி நிலம். நகர்ப்புற நிலவரித் திட்டப்பதிவேட்டின்படி இந்நிலம் புதிய டவுன் சர்வே எண்.35ல், AK வார்டு, பிளாக் எண்.27ல் அப்பதிவேட்டின்படி மொத்தமுள்ள புன்செய் எக்டர் 0.1.41.5 நிலத்தினுள் அனைத்து பயன்பாட்டுரிமைகள் மாமூல் தட நடை பாத்தியம் முதலியன சேர்ந்த சொத்து. **அட்சரேகை : 11.665528 N, தீர்க்கரேகை : 78.187893E**	அ) 04.03.2024 **ஆ) 31.10.2026 தேதி அன்று ரூ.1,38,71,274.89** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து எட்டு லட்சத்து எழுபத்து ஒராயிரத்து இருநூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா எண்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் **01.11.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள் **(கணக்கு எண். 07144011000925).** இ) 13.06.2024 ஈ) அடையாளம்	**லாட் 1 :** **1) ரூ.36,50,000/-** (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) **2) ரூ.3,65,000/-** (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) **3) ரூ.20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 03.12.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
2	**லாட் 2 : திரு.V.செல்வம் பெயரிலுள்ள சொத்துக்கள் : (PAN NO AUXPS4567P) :** **இனம் எண்.2 : (ஆவண எண்.3119/1986ன்படி) :** சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, தாதம்பட்டி கிராமத்தில் மறுசர்வே எண்.185/1ல் அடங்கிய புன்செய் ஏக்கர் 3.00ல் **முதல் தாக்கு : 2606 சதுர அடி விஸ்தீரண நிலத்தின் எல்லைகள் :** பாலசுப்ரமணியத்தின் அதிகார முகவர் விற்பனை செய்த நிலத்துக்கு மேற்கு, இரண்டாம் தாக்கு வழித்தட நிலம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி நிலத்துக்கு வடக்கு, பாலசுப்ரமணியம் வகையறாவுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, பாலசுப்ரமணியம் வகையறாவுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு. **நிலத்தின் நேரிட்ட அளவுகள் :** கிழமேல் வடபுறம் 68 அடி, கிழமேல் தென்புறம் 71 அடி, தென்வடல் கிழபுறம் 39 அடி, தென்வடல் மேல்புறம் 36 அடி ஆக உள்ள 2606 சதுர அடி நிலம்; புதிய டவுன் சர்வே எண்.31/2, வார்டு AK, பிளாக் எண்.27ல் அடங்கிய 0.2.48.0 எக்டர் மற்றும் டவுன் சர்வே எண்.30/2, வார்டு AK, பிளாக் எண்.25ல் அடங்கிய 0.0.40.5 எக்டர் ஆகியவற்றினுட்பட்டதாகும். **இரண்டாம் தாக்கு : (விற்பனை ஆவணப்படி தடவழி உபயோகத்துக்கென உள்ள 1678 சதுர அடி விஸ்தீரண நிலம்) :** பாலசுப்ரமணியம் விற்பனை செய்த நிலத்துக்கு மேற்கு, V.தர்மலிங்கத்துக்கு விற்பனை செய்த நிலத்துக்கு வடக்கு, கிருஷ்ணமூர்த்தி மற்றும் வகையறாவுக்கு விற்பனை செய்த நிலத்துக்குக் கிழக்கு, முதல் தாக்கு நிலத்துக்குத் தெற்கு. **நிலத்தின் நேரிட்ட அளவுகளாக :** கிழமேல் வடபுறம் 8 அடி, கிழமேல் தென்புறம் 7½ அடி, தென்வடல் கிழபுறம் 216½ அடி, தென்வடல் மேல்புறம் 216½ அடி ஆக உள்ள 1678 சதுர அடி நிலம் தடவழி உபயோகத்துக்கெனவிடப்பட்டது. டவுன் சர்வே எண்.34/8ல் வார்டு AK, பிளாக் எண்.27ல் 0.1.8.0 எக்டர் விஸ்தீரணத்தில் உள்ளது. மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்து, கொய்யாத்தோப்பு வீதியில் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. **அட்சரேகை : 11.665500N, தீர்க்கரேகை : 78.187861E**			**லாட் 2 :** **1) ரூ.74,00,000/-** (ரூபாய் எழுபத்து நான்கு லட்சம் மட்டும்) **2) ரூ.7,40,000/-** (ரூபாய் ஏழு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) **3) ரூ.20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 03.12.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **03.12.2026 (வியாழக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 06.11.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாசிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)-ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு